REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 12உ சனி (23—2—57) ★ ★ வெளியூர்: மாசி 13உ ஞாயிறு (24—2—57) [இதழ் 221

'காங்கிரஸ் தரும் தண்ணீர் வேண்டாம்'

ஷில்லாங், பிப். 23—

காங்கிரஸ் தரும் தண்ணீர் தங்களுக்குத் தேவையில்லை என்றுகூறி, சிரபுஞ்சிவாழ் பழங்குடி மக்கள் குடிதண்ணீர்க் குழாய்களை பெயர்த்து எறிந்துவிட்டனர் என்று தெரிகிறது.

உலகிலேயே அதிகமான மழை பொழியும் இந்தப் பிரதேசத்தில், தண்ணீர் வசதி போதாது இருப்பது கண்டு சர்க்கார் பெரிய் தண்ணீர் தொட்டி ஒன்றுகட்டி குழாய்கள் மூலம் தண்ணீர் நிரப்பி மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தனர்.

ஆனால், இந்தப் பகுதிவாழ் பழங்குடி மக்கள் காங்கிரஸ் தரும் தண்ணீர் தங்களுக்கு வேண்டாம் என்றுகூறி, குழாய்களைப் பெயர்த்து எறிந்திருக்கின்றனர்.

தொழில் எல்லாம் தங்களுக்கே வேண்டும் என்ற

டில்லிப் பெரியவர்களின் பேராசை!

உருப்படாத தொழிலுக்கும் பணம் பாழடிக்கப்படும் கொடுமை

நேபா காகிதத் தொழிற்சாலையின் இலட்சணம் சுவீடன் நிபுணர் அம்பலமாக்குகிறார்

நியூயார்க், பிப். 22—

'நேபா பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை உருப்படாது' என்று சுவீடன் நாட்டு வர்த்தகத் தூதுக்குழு உறுப்பினர் ஒருவர் கருத்தறிவித்திருக்கிறார்.

'இந்தத் தொழிற்சாலை, பத்திரிகைக் காகிதம் செய்வதற்கான கூழ் தயாரிப்பதற்கு நம்பியிருக்கும் மரம், பத்திரிகைக் காகிதம் தயாரிக்க பொருத்தமானது அல்ல' என்றும், ஸ்டென்சண்ட் க்ரேன் என்ற அந்த உறுப்பினர் கூறியிருக்கிறார்.

'ஒருவேளை, இரசாயனமும், ஆராய்ச்சி அறிவும்தான், இந்த மரக் கூழைக்கொண்டு காகிதம் தயாரிக்க முடியுமா என்பதைக் கண்டாக வேண்டும்' என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த உருப்படாத தொழில், சர்க்காரே நிறுவியிருப்பதாகும்; இதற்காக பல கோடி ரூபாய் செலவிட டில்லிப் பெரியவர்கள் முடிவு செய்திருப்பது தெரிந்ததே!

தி. மு. கழக ஆதரவாளர்கள்

★

சென்னை—சட்டசபை

நெல்லைத் தொகுதி: டி. கந்தையா

நன்னிலம் (பொது) தொகுதி: கே. பெரியசாமி

வந்தவாசி: தர்ம கவுண்டர்

ஒட்டன்சத்திரம்: அங்கமுத்து

மணப்பாறை: வி. வால்மீகி

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சென்னை-பக்கிங்காம் ஆலை கதவடைப்பு

நிர்வாகிகள் நியாயவிரோதப்போக்கு

1,500 தொழிலாளர் மனம் கொதிக்கின்றனர்

சென்னை, பிப். 23—

கடந்த 21-2-57 அன்று சென்னை-பெரம்பூர் பக்கிங்காம் ஆலை தறிப் பிரிவில் ஒரு தொழிலாளி 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதை ஒட்டி அப்பிரிவுத் தொழிலாளர்கள், அன்றுமுதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். இதன் காரணமாக ஆலை நிர்வாகிகள், இன்று முதல் ஆலையை மூடிவிட்டு, கதவடைப்புப்பற்றி அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்களாம்.

அந்த அறிக்கையின் சாரமாவது :—

"21-2-57 முதல் பக்கிங்காம் ஆலைத்தறிப் பிரிவில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள்; இதனால் இதர பிரிவு வேலைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே, எல்லாப் பிரிவுகளையும் நடத்துவது சாத்தியமில்லாமல் இருப்பதால், தறிப் பிரிவுத் தொழிலாளர்கள் மீண்டும் வேலை துவங்க உறுதியளித்தால் அல்லாது, ஆலையைத் திறப்பதற்கில்லை. எனவே, இதர பிரிவுத் தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட தொழிலாளருக்கு இது பற்றி எடுத்துரைத்து சீக்கிரம் வேலை துவங்க முயற்சிப்பார்கள் என்று நம்புகிறோம்.

"குறிப்பிட்ட நாளுக்குள் தொழிலாளர்கள் வேலையை ஆரம்பிக்காவிட்டால், வேலை இழந்த நாட்களுக்குச் சம்பளமோ, பஞ்சப்படியோ கொடுக்கப்படமாட்டாது."

இந்த விபரங்களடங்கிய அறிக்கை ஆலையின் தலைவாசலில் ஒட்டப்பட்டிருந்தது; வழக்கம்போல் வேலைக்கு வந்த தொழிலாளர்கள் கதவடைப்பு கண்டு திடுக்கிட்டுப் போய்விட்டனர்; ஏமாற்றத்தோடு நிர்வாகிகளின் இந்தப் போக்கினைக்கண்டு மனம் கொதித்த நிலையில் வீடு திரும்பினர்.

ஆலையைச் சுற்றிலும் ஏராளமான ஆயுதந்தரித்த போலீசார் நிறுத்தப்பட்டிருக்கின்றனராம்.

பசியுள்ள தமிழரைப் பார்க்க மறுக்கும் பச்சைத் தமிழர்!

டி. கே. சீனிவாசன் வருணனை

"திராவிட நாட்டின் பழைய வரலாற்றை—பண்டைச் சரித்திர நிகழ்ச்சிகளைக்காட்டி, இந்த நாட்டின் வளத்தைக் காட்டி, அந்த வளங்களை அனுபவிக்கமுடியாத ஏழைகளைக் காட்டி திராவிட முன்னேற்றக் கழகம், 'திராவிட நாடு தனி நாடாக வேண்டும்' என்று கேட்கிறது.

"3 கோடி தமிழ் மக்கள் வாழ வழியில்லாமல் வாடுகிறார்கள்; இருபதாயிரம் முப்பதாயிரம் தமிழ் மக்கள் இங்குவாழ வழியில்லாமல் ஆமதாபாத்தில் கூலிவேலை செய்து பிழைக்கிறார்கள்; எத்தனையோ ஆயிரம் தமிழ் மக்கள் பம்பாயில் பூட்ஸ் பாலிஷ் துடைக்கிறார்கள்; 9 இலட்சம் தமிழர்கள் இலங்கையில் எது நாடென்று தெரியாமல் திண்டாடுகிறார்கள்; இவற்றையெல்லாம் கடந்த 5 ஆண்டுகளாகத் தடுக்கத் தோன்றவில்லை இந்த சர்க்காருக்கு; ஏன் கவனமில்லை இப்போதிருக்கும் 'பச்சைத் தமிழ'ருக்கு? அவர் பச்சைத் தமிழனாகவே இருக்கலாம்; ஆனால் பசியுள்ள தமிழனைப் பார்க்காத அவர் 'பச்சைத் தமிழ'னாக இருந்தால் என்ன—'பழுத்தத் தமிழ'னாக இருந்தால் என்ன என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது"

—என்று கடந்த 21-ந்தேதியன்று, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டையில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் டி. கே. சீனிவாசன் குறிப்பிட்டார்.

விடுதலைப் புரட்சியின் அங்கமே!

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"அகில உலகிலும் நடைபெற்றுள்ள விடுதலைப் புரட்சிகளின் வரலாற்றில் ஒரு அங்கம்தான் திராவிட நாடு பிரச்சினையும். ரஷ்ய விடுதலை இயக்கத்தை நடத்திச் சென்ற லெனின், 'வாழ்க என்நன்னாடு—பொன்னாடு' என்று கூறி விடுதலை முரசு கொட்டினார் — வென்றார்—வாழ்கிறார்கள்! மா-சே-துங்கும் இப்படித்தான் சொன்னார்—வென்றார்-வாழ்கிறார்கள்! அதுபோலத்தான் திராவிடத்தின் ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்களும் 'வாழ்க எம் நன்னாடு — பொன்னாடு' — என்றுகூறி விடுதலைப் போராட்டம் நடத்துகிறார்—நிச்சயம்வெல்லுவார்—நாமும்வாழத்தான் போகிறோம்! எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த உரிமைப் போருக்கு நிச்சயம் மாற்றார் ஆதரவு தந்தேயாக வேண்டும். அப்படியானால் தான் வருங்கால திராவிடத்தில் அவர்கள் மதிப்போடு வாழ முடியும்.

"இப்படி திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அடிப்படையில் நாட்டு மக்களை அணுகித் தேர்தலில் ஓட்டுப்போட மக்களைக் கேட்கும்போது மற்றவர்கள் வந்து, 'இவர்கள் தங்கள் விஞ்ஞாபனத்தில் திராவிட நாடு பிரிவினையை விட்டுவிட்டார்கள்' என்றுகூறித் திரிகிறார்கள். அதே கேள்வியை நாம் திருப்பிக் கேட்கிறோம் நமது கம்யூனிஸ்டு நண்பர்களை—'எங்கள் கட்சி கம்யூனிசத்தை நோக்கித்தான் செல்கிறது என்று நீங்கள் உங்கள் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்களா?'—என்று! அவர்கள் அப்படி எழுதிவிட்டு எங்களைப் பார்த்துக் கேட்டால் அவர்கள் நாணயமுள்ளவர்கள்தான். அவர்களும் அப்படிச் செய்யவில்லை; அப்படிச் செய்யாதது தவறு என்றும் நாங்கள் சொல்லவில்லை.

"'தேர்தல் அறிக்கை என்பது, வருகிற 5 ஆண்டுகளில், நீங்கள் எங்களைத் தேர்ந்தெடுத்தால் நாங்கள் இன்னின்ன செய்வோம்' என்று மக்களுக்குத் தருகிற ஒரு பட்டியல் 1951ல் கம்யூனிஸ்டுகள் தேர்தலில் போட்டியிட்டார்கள்—'நாங்கள் இன்னின்ன செய்வோம்' என்று பட்டியலும் வெளியிட்டார்கள்; 1957-லும் இப்போது போட்டியிடுகிறார்கள்—பட்டியலும் வெளியிட்டிருக்கிறார்கள்.

கட்டிட பிளானும் தி. மு. கழக திட்டமும்

"ஒரு கட்டிடம் கட்டுவதற்கான 'பிளான்' வைத்திருக்கிறேன் என்று சொல்பவனிடம் 'அடுத்த வாரம் என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்டபோது, 'அடுத்த வாரம் அஸ்திவாரம் கட்டப்போகிறேன்' என்று அவன் மறுபடியும் பதில் சொல்வதினால் இரண்டுக்கும் முரண்பாடு ஒன்றும் கிடையாது. கட்டிடம் கட்ட நெடுநாள் பிடிக்கும்; அஸ்திவார வேலைகள் ஒரு வாரம் பிடிக்கும். இதுபோலத்தான் 5 ஆண்டுகளுக்கு சட்டசபைக்கு போய்விடுவதால் உடனே திராவிட நாட்டைப் பெற்றுவிட முடியாது; ஆனால், அந்த 5 ஆண்டுகளில் திராவிட நாட்டுப் பிரிவினைக்கான மற்றக் காரியங்களைச் செய்வோம். எனவே இந்த முறைகளினாலெல்லாம் நம்மைக் கேலியும் கிண்டலும் செய்வோர், திராவிட முன்னேற்றக் கழகம்

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தலுக்குப் பிறகே ஜாரிங் இந்தியா வருவார்

பாகிஸ்தான் அமைப்பு பற்றி நேரு கருத்து

நியூயார்க், பிப். 22—

காஷ்மீர் விவகாரத்திற்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் பரிகாரம் தேட ஐ. நா. பாதுகாப்புச் சபையினால் நியமிக்கப்பட்டிருக்கிற சுவீடன் பிரதிநிதி குன்னார் ஜாரிங் என்பார், முதலில் பாகிஸ்தான் செல்வார் என்றும், இந்தியாவில் தேர்தலுக்குப் பிறகு புதிய சர்க்கார் அமைந்த பிறகே வருவார் என்றும் கூறப்படுகிறது.

ஜாரிங், தனது பேச்சுவார்த்தை முயற்சிகளின் விளைவினை ஏப்ரல் 15-ந் தேதிக்குள் தெரிவிக்குமாறு கோரப்பட்டிருக்கிறார் என்பது நினைவிலிருக்கலாம்.

நேரு வருந்துகிறார்!

ஐதராபாத், பிப். 22—

"சுதந்திரத்திற்குப் பின்னும் பிரிட்டன் பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடிப்பது கண்டு வருந்துகிறேன். இரண்டு தேசங்கள்—இரண்டு சமூகங்கள் என்ற அடிப்படையில் அல்ல, நாங்கள் பாகிஸ்தான் அமைவதற்கு ஒப்புக்கொண்டது; வெறும் பிரதேச அடிப்படையில்தான் ஒப்புக்கொண்டோம். இன்றும், காஷ்மீர் விவகாரத்திலும் அந்த இரு தேசிய சமூகக் கொள்கையை நாங்கள் அனுசரிக்க வேண்டும் என்பதை நாங்கள் எதிர்ப்போம். காஷ்மீர் மக்கள் இதனை ஏற்கனவே நிராகரித்துவிட்டனர்"

என்று, பண்டித நேரு இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—2—57 சனி

புதுமையான போட்டி!

ஆளும் கட்சியான காங்கிரசு, மேலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் விருப்புடன் பொதுத் தேர்தலில் கலந்து கொண்டு இருக்கிறது. அதுபோன்றே மக்களாட்சி சிறந்து செயல்படுவதற்கு இன்றியமையாத் தேவையாக இருக்கும் எதிர்க் கட்சியை உருவாக்குவதற்கு அகில இந்திய அமைப்பில் செயல்பட்டு வருகின்ற கட்சிகளும் தேர்தலில் கலந்துகொண்டுள்ளன.

இக்கட்சிகளைப் போன்றே, வலிவான எதிர்க்கட்சி ஒன்றை உறுதிவாய்ந்த கடைக்காலின் மீது நிர்மாணிக்கும் நன்னோக்குடன், நமது முன்னேற்றக் கழகமும் தேர்தலில், காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டுத் தமிழ்மக்கள் ஆதரவை எதிர்நோக்கி இருக்கிறது.

இப்பொதுத் தேர்தலில் கட்சி ரீதியில் போட்டியிடப்படுவதுடன், எந்தத் தேர்தலிலும் வழக்கமாக நடைபெறுவதுபோன்றே, தனி நபர்களும் பலப்பல தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இதுவுமன்றி மற்றொரு புதுமையான போட்டியும் இந்தத் தேர்தலில் இடம்பெற்று இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் தலைகாட்டி, வெற்றி ஏற்பட்டாலும் தோல்வி ஏற்பட்டாலும் தேர்தலுக்குப் பிறகு மூச்சுப்பேச்சின்றி மூலையில் முடங்கிக் கிடக்கின்ற சில அற்புத அரசியல் சித்தர்களும் தமிழ் மக்கள் நலம் பேசி தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றார்கள். இந்த அற்புத சித்தர்களில் இரண்டொருவர், எவரிடத்திலோ செய்து முடித்துக்கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுவது ஒன்றையே குறியாகக் கொண்டு தேர்தலில் கலந்து கொள்ளுகின்றவர் போன்றே, தேர்தலில் களம் புகுந்து இருக்கின்றனர்.

இந்த அரசியல் அற்புத சித்தர்கள், மயான வைராக்கிகளைப் போன்று, காங்கிரசாட்சியின் அடக்குமுறை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பது குறித்தும் காங்கிரசு அரசாங்கத்தின் ஊழல் நிர்வாகத்தைத் திருத்த அமைப்பதுபற்றியும், தமிழ் மக்கள் திகைப்படையும் அளவிற்கு எழுதியும் பேசியும் வருகிறார்கள். இந்த அற்புத சித்தர்கள் ஒருவேளை வெற்றி பெற்றுவிட்டால், தங்களுக்குத் தரவிருப்பதாகக் கூறும் உயர்தனிப் பெரும் வாழ்வைத் தங்களால் தாங்கிக்கொள்ள முடியுமா என்றுங்கூட அஞ்சவேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெற, தேர்தல் காலத்தில் தோன்றித் தமிழ் மக்கள் பெற்றுள்ள நலிவு குறித்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டு, அதைத் துடைக்காது உண்ணுவதில்லை என்று பகட்டாகச் சூளுரைத்து, பத்திபத்தியாகச் சுயவிளம்பரம் செய்துகொள்ளுவது மட்டுமே போதுமானது என, இந்த அற்புத சித்தர்கள் முடிவுகட்டிச் செயல்பட்டு வருகிறார்கள்.

காங்கிரசாட்சி ஏவிய அடுக்கடுக்கான நாசங்களைத் தங்களால் தாங்கமுடியாது தாங்கி, துன்பத்தைத் துடைத்துக்கொள்ள மார்க்கங் காணாது துவண்டு, விடுபடும் வகை தெரியாது விழித்து, வேதனை வாழ்வில் வீழ்ந்து கிடந்தபோது ஆறுதலாக நான்கு வார்த்தை கூற — கைகொடுத்து கரை சேர்க்கத் தங்களை அணுகாதது டன் மட்டுமல்லாது, தங்களைக் குறித்து அக்கரை இருப்பதாகக்கூட காட்டிக்கொள்ள விரும்பாத இந்த அரசியல் சித்தர்களுக்கு, தங்கள் நொந்த வாழ்வைப் போக்க இப்பொழுது மட்டும் அக்கரை வருவது ஏன் —அது எந்த அளவு உண்மையானதாகும் என்றெல்லாம் தமிழ்ப்பெருங்குடி மக்கள் கருதாமலா போவார்கள்? இந்த இரண்டு நிலைக்கும் உள்ள வித்தியாசத்தை ஆராய்ந்து பார்க்கக்கூட முடியாத அளவிற்கா, தமிழ் வாக்காளர்களின் ஆராய்ச்சி அறிவு பழுதுபட்டுப் போய் கிடக்கிறது?

குலக் கல்வித் திட்டத்தைப் புகுத்தி தமிழ் மக்களின் கல்விக் கண்ணை நிரந்தரமாகக் குருடாக்கிப்போட ஆச்சாரியார் முன் வந்தபொழுது அதைத் தடுத்து நிறுத்த மனம் கொள்ளாது, எங்கேயோ பணம் பண்ணிக் கொண்டு இருந்துவிட்டு, தேர்தல் நேரத்தில் மட்டும் தங்கள் முன்தோன்றி, 'மண்ணைக் கயிறாகத் திரிப்போம்—வானத்தை வில்லாக வளைப்போம்' என்றெல்லாம் வீரம் பேசுவதின் உள்ளடக்கத்தைத் தமிழ் மக்கள் இந்த நேரத்தில் நினைக்காமலா இருப்பார்கள்?

நெசவாளர் வேலையிழந்து, வீதிவீதியாய் ஊர் ஊராய் ஒரு கவளைச் சோற்றுக்குக் குடும்பத்துடன் சுற்றி அலைந்து, வானமே கூரையாய்,கட்டாந் தரையையே பஞ்சணையாய்க்கொண்டு தூங்காமல் தூங்கி, மானமிழந்து பரிதவித்துக் கிடந்தபொழுது அவர்கள் துயர் களைய கனவிலும் கருதாத இந்த அற்புதச் சித்தர்கள், தேர்தல் நேரத்தில் மட்டும் தங்களைத் தேடிவரும் திருவிளையாடலை நெசவாளர்கள் எண்ணிப் பார்க்கத் தவறியா விடுவார்கள்?

கடும் புயலுக்கும், வெள்ளப் புனலுக்கும் ஆளாகி, குடிசைகளை இழந்து, வாழ்நாள் முழுதும் உழைத்துச் சேர்த்துவைத்திருந்த தட்டுமுட்டுச் சாமான்களைப் பறிகொடுத்து, பெற்ற செல்வங்களை இழந்து, உற்றார் உறவினரைத் துறந்து, வாழ வகையற்று தாங்கள் தவித்துக் கொண்டிருந்தகாலை, அன்புரை வழங்கி செல்லாக் காசும் உதவ முன்வராத இந்த அற்புத சித்தர்கள், இப்பொழுது ஏன் தங்களைத் தேடி வருகிறார்கள்—பாரியும் காரியும்போல் பணத்தை வீசி எறிகிறார்கள் என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்காமலா இருக்கப்போகிறார்கள்?

தமிழ் மக்களின் சிந்தனைச் செல்வம் இன்னும் பட்டுப் போகவில்லை. அது என்றும் போல் கூர்மையாகத்தான் இன்றும் இருந்துவருகிறது.

'நீதியையும் ஒழுக்கத்தையும் காங்கிரஸ் உருவாக்கவில்லை'

'நடை பிணங்களாக நாட்டில் வாழ்வதற்கு மக்கள் இனி இடமளிக்கக்கூடாது'

மகளிர் மன்றக் கூட்டத்தில் இலட்சிய முழக்கம்

"1938-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் பெத்துநாய்க்கன்பேட்டை முக்கிய இடம் வாய்ந்தது. இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தித் தந்தவர்கள் நமது மதிப்பிற்குரிய தாய்மார்களாவர். அந்தத் தாய்க்குலம் தான் இன்றும் தி. மு. கழகத்திற்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்துவருகிறது. அப்படிப்பட்ட தாய்க்குலம் எங்கள் பக்கத்தில் இருக்கும்வரை எங்களுக்கு அச்சமில்லை என்ற நிலை தி. மு. கழகத்திற்கு இருக்கிறது என்பதைக் கூறப் பெருமைப்படுகிறோம்."

இவ்வாறு துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 19—2—57 மாலை, சென்னை —பெத்துநாய்க்கன் பேட்டையில் மகளிர் மன்றச் சார்பில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தோழியர் புவனேசுவரி-நடராசன் முன்மொழிய, தோழியர் நித்தியா வழிமொழிய, கூட்டத்திற்குத் தோழியர் வெற்றிச்செல்வி-அன்பழகன் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப் பின் தோழியர் அருதா, சத்தியவாணி-முத்து, தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், வி. எஸ். கோவிந்தராசன், சிறுவன் கண்ணன், சிறுமி கஸ்தூரி ஆகியோர் பேசினர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் ஊ. கு. இராமதாசன மற்றும் பலர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தோழியர் அருதா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"யாருக்கு நல்ல உணர்வும் உள்ளமும் இருக்கிறதோ அவர்கள் தி. மு. கழகத்தைத்தான் ஆதரிப்பார்கள். எங்கள் இயக்கத்தில் உள்ள தோழர்கள் அனைவரும் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து மக்களுக்காகப் பாடுபடுபவர்கள். கழகத்தில் இருக்கும் அனைவரும் சாதாரண ஏழை, பாட்டாளி, தொழிலாளி மக்கள்; இவர்களைக் கொண்ட எங்கள் கட்சியைத்தான் ஏழை பாட்டாளி மக்கள்—தொழிலாள வர்க்கம் ஆதரிக்கும். அப்படி எங்களைத் தான் ஆதரிக்க வேண்டுமென்று உரிமையோடு கேட்பதற்கு எங்களுக்குத்தான் வழியுண்டு. நாங்கள், மக்களுக்கு என்ன தேவை —நாட்டின்சுபிட்சத்திற்கு என்ன தேவை என்பவைகளை அறிந்து மக்கள் நலனுக்காகப் பாடுபடுவோம்."

தோழர் சி. ஆர். பாலசுந்தரம் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"'காஞ்சீபுரத்தில் போட்டியிடும் அண்ணாதுரையை தோற்கடியுங்கள்' என்று காமராசர் காஞ்சீபுரத்தில் கூறியிருக்கிறார். காஞ்சீபுரத்தில் அண்ணா தோற்றுவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் இறந்துவிடாது. இங்கு போட்டியிடும் தோழர் நடராசன் தோற்றுவிட்டால் வீட்டில்போய் படுத்துவிடமாட்டார். நாங்கள் சட்டசபைக்கு உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் என்றென்றும் மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருப்போம். நாங்கள் சட்டசபைக்குச் சென்றால் நாட்டின் வளத்திற்காகப் பாடுபடுவோம்—மக்கள் நன்மைக்காகப் பாடுபடுவோம். ஆனால், இன்னும் இந்தக் காங்கிரஸ்தான் ஆட்சிப் பொறுப்பில் வந்தால், நிச்சயம் இந்த நாடு சுடுகாடாகத் தான் மாறப்போகிறது; நாமெல்லாம் வெறும் செத்த நடை பிணங்களாகத்தான் வாழப்போகிறோம் என்று எச்சரிக்கிறேன்."

தோழர் வி. எஸ். கோவிந்தராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மகனுக்குக் கல்வியூட்டவேண்டிய பொறுப்பு தகப்பனுடையது; அவனுக்கு போரில் தேவையான நல்ல வேல் செய்து தரவேண்டிய பொறுப்பு கொல்லனுடையது; சமுதாயத்திலே நல்லதோர் குடிமகனாக—ஒழுக்கமுள்ளவனாக்கும் பொறும்பு அரசனுடையது. இப்படி நாட்டிலே ஒழுக்கத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்திருக்கிறது. ஆனால், இன்றையக் காங்கிரஸ் சர்க்காரோ அரசியலிலே நேர்மையும் ஒழுங்கையும் உருவாக்கவில்லை; அவைகளை வளர்க்கவேண்டிய தனது பொறுப்பையும் அது தட்டிக் கழித்துவிட்டது.

"மக்கள் அளிக்கும் தீர்ப்புகளை மதித்து நடக்கவேண்டிய சர்க்கார்; அவைகளை காலடியில் போட்டு மிதித்து ஒழுக்கத்தையும் நீதியையும் வளர்க்கத் தவறிவிட்டது.

"ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிப்பட்டதல்ல; மக்களின் கருத்தை மதித்து நடக்கும் கழகம். அரசியல் நேர்மையை கட்டிக் காத்துவரும் இயக்கமாகும்.

விடுதலைப் போரில் பலியானேர்!

3 இலட்சம் பேர்களாம்!

அல்ஜீரியா, பிப். 21—

கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்து நடத்திவரும் விடுதலைப் போராட்டத்தில் சுமார் 3 இலட்சம் அல்ஜீரியர்கள் பிரெஞ்சு இராணுவத்தினரால் பலியாகியுள்ளனர் என்று தேசியவாதிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

"உலகின் பல பாகங்களிலுமுள்ள விடுதலை பெற்ற நாடுகளின் வரலாறுகளில் மூன்று முக்கியக் கட்டங்கள் உண்டு. முதலாவது, அடிமை நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதற்காகக் கிளம்பும் விடுதலைக் குரலுக்கு ஆட்சி பீடத்தினர் காட்டும் அலட்சியம்; அதற்கடுத்த கட்டம், விடுதலை இயக்கம் தீவிரமாகக் கிளம்புவது தெரிந்ததும் அடக்குமுறை ஏவப்படும். அதன் பிறகு மூன்றாவது கட்டமாகப் பொதுத் தேர்தலும் இறுதியில் 4.வது கட்டமாக விடுதலையும் கிடைக்கும். நாமும் நமது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 3-வது கட்டமான தேர்தல் கட்டத்திலே வந்து நிற்கிறோம். கடந்த காலத்தில் எத்தனையோ போராட்டங்களை நமது இயக்கமும் அதன் தலைவர்களும் நடத்தித் தங்களது கடமையை ஆற்றியிருக்கிறார்கள். இப்போது தேர்தலில் இயக்கத்தை வெற்றி பெறச்செய்ய அதன் தொண்டர்களாகிய நாம் நமது கடமைகளைச் செய்வோம்; கழகத்தை வெற்றிபெறச் செய்வோம்.

1,020 முறை துப்பாக்கிப் பிரயோகம் 480 பேர் பலி; 3,136 பேருக்கு காயம்

பத்து ஆண்டுக்கால ஆட்சியில் 'அகிம்சா மூர்த்தி'களின் திருவிளையாடல்!

கடந்த 10 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டு வருகின்ற காங்கிரஸ் 'அகிம்சாமூர்த்தி'களின்—'ஜீவகாருண்ணியமிக்க' ஆட்சியில், பொதுமக்கள்மீது எத்தனை முறை துப்பாக்கிப்பிரயோகப் நடைபெற்றது—எத்தனை 'இந்த நாட்டு மன்னர்கள்' தங்கள் உயிரைத் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்கினர் என்பது பற்றிய ஒரு புள்ளிவிவரம் கிடைத்துள்ளது; அது இங்கு தரப்பட்டிருக்கிறது:—

10 ஆண்டுக் காலத்திற்கிடையில் 1,020 தடவைகள் பொதுமக்கள்மீது துப்பாக்கிக் குண்டுகளை ஏவியிருக்கின்றனராம், இந்த சர்க்கார்!

இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களின் விளைவாக 840 பேர் பலியாக்கப்பட்டனர் என்றும், துப்பாக்கிப் பிரயோகங்களின் விளைவாகப் படுகாயமுற்றோர் தொகை 3,136 என்றும் தெரிகிறது.

இதே நேரத்தில் போலீசார் எவரும் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது உயிர் துறந்ததில்லை என்றும் ஒரு சிலருக்கு மட்டும் சொற்பகாயம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

பொதுமக்கள்மீது மட்டுமல்லாது, இந்த 'அகிம்சா மூர்த்தி'கள், மாணவர்கள்மீதும் துப்பாக்கிக் குண்டுகளை பிரயோகித்து, 36 மாணவர்களின் உயிர்களைக் குடித்திருக்கின்றனராம். மாணவர்களை நோக்கி மொத்தம் 30 - தடவைகள் சுட்டதில் 36 - மாணவர்கள் உயிர் துறந்தது மட்டுமின்றி, 373 பேர் காயமும் பட்டிருக்கின்றனராம்.

இவர்கள் மட்டுமின்றி 52 - முறைகள் தொழிலாளர்கள் மீதும் சுட்டு, மொத்தம் 67 - தொழிலாளர்களைப் பிணங்களாக்கினர் என்றும், 924 - பேரைக் காயப்படுத்தினர் என்றும் தெரிகிறது.

இந்தத் தகவல்களையெல்லாம் சோஷலிஸ்டுக் கட்சியை சேர்ந்த

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸ்டுகளின் காலித்தனம்

கழகக் கூட்டத்தைக் கலைக்க முயற்சி!

சிங்காநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த உப்பிலிபாளையம் எனும் இடத்தில் கடந்த 18-ந் தேதியன்று இரவு திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தை நடைபெறவொட்டாது எவ்வகையிலும் தடுக்கவேண்டும் என்ற நினைப்பில் அவ்வூரைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் கழகக் கொடிகளைப் பிடுங்கியும், கூட்டத்தில் கற்களை வீசியும் குழப்பம் விளைவித்தனராம்; என்றாலும், கழகத் தோழர்கள் அனைவரும் அமைதியாக இருந்து ஒழுங்கை நிலைநாட்டியிருக்கின்றனர்.

கூட்டத்தில் கல்லெறிந்து கொண்டிருக்கையில், இறுதியாக ஒரு கம்யூனிஸ்டுத் தோழர் ஒலிபெருக்கி முன்வந்து 'கல்லெறிவதை நிறுத்துங்கள்' என்று கேட்டுக்கொண்டதாகவும், அதன் பிறகே கல்வீச்சு நிறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளின் இந்தஅடாத செய்கை பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியையும் அவர்கள்மீதே வெறுப்பையும் உருவாக்கிவிட்டிருக்கிறதாம்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு

பம்பாய் தோழர்கள் தரும் காணிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் ஈடுபாட்டையொட்டி, தேர்தல் நிதி தருமாறு பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்று, தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் உள்ள கிளைக் கழகங்களும் கழகச் சார்பு அமைப்புகளும் மற்றும் தனிப்பட்டோரும் தங்களாலியன்றவரை நிதி திரட்டி அனுப்பிவைத்துமுள்ளனர். இப்படி தமிழகத்தில் இருப்பவர்கள் மட்டுமேயன்றி, இலங்கை மலாயா போன்ற வெளிநாடுகளுக்கும் ஆமதாபாத், பம்பாய் போன்ற வடநாட்டுப் பகுதிகளுக்கும் பிழைப்பதற்காகச் சென்ற தமிழ் மக்கள்—தமிழ் நாட்டின் நலனில் அக்கரை கொண்ட தமிழ் மக்கள்—தங்கள் நலனுக்காக அக்கரை எடுத்துக்கொள்ளும் ஒரே இயக்கமான தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறதென்பதையும், அதற்கான நிதி தேவை என்பதையும் அறிந்த தமிழ் மக்கள் தங்கள் தங்கள் பங்கினைச் செலுத்த முன்வந்தனர்.

அண்மையில் நடைபெற்ற பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுவின் தீர்மானத்திற்கிணங்க கிளைக் கழகத் தோழர்கள் வசூலித்த ரூ. 1,313-2-0 முதல் முறையாகப் பொதுச்செயலாளர் அவர்கட்கு அனுப்பியிருக்கின்றனர்.

அந்நிதி விவரம் பின்வருமாறு:

தாராவி தி. மு. கழகக் கிளை: ரூ 706-8-0

லால்பாக் தோழர் சுப்பிரமணி அவர்கள்மூலம் ரூ. 32-2-0.

சோரேகான் தி. மு. கழகம் ரூ. 39-8-0.

கம்பாலா ஹில் தி. மு. கழகம் ரூ. 115.

அந்தேரி தி. மு. கழகம் ரூ. 170.

மாதுங்கா தி. மு. கழகம் ரூ. 250

★

சென்னை 33-வதுவட்டத் தோழர்கள் அன்பளிப்பு

சென்னை 33-வது வட்ட சேத்துப்பட்டுத் தோழர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அளித்த ரூ. 73—9—0 தோழர் ஏ. அன்புச்சுடர் மூலம் வரப்பெற்றோம்.

★

இலந்தூர் தோழர்கள் அன்பளிப்பு

இலந்தூர் தோழர் சுமார் அவர்கள் மூலம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அனுப்பிவைக்கப்பெற்ற ரூ. 10 வரப்பெற்றோம்.

அறிவிப்பு

'திருச்சிராப்பள்ளி 1வ-து தொகுதி வாக்காளர் பொது மக்களுக்குத் தி. மு. கழக வேண்டுகோள்' என்ற தலைப்பிட்டுத் திருச்சி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரால் துண்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. தலைமைக் கழகத்திற்கு நிலைமை தெளிவாக்கப்படாமலும் தலைமைக் கழகத்தின் கருத்து அறியப்படாமலும் முன்கூட்டி அனுமதி பெறப்படாமலும் அவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அது பற்றி நகர செயலாளரோடு கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

'அறிவகம்' சென்னை 20-2-57 —தலைமைக் கழகம் (தி. மு. க.)

பஞ்சசீலப் பண்டிதர்களின் தாராளம்!

★

வடநாட்டு அகதிகளுக்கு வாழ்வளிக்க

ரூ. 250 கோடி

1947 முதல் 1956 வரை செலவிடப்பட்டுள்ளதாகப் பெருமையோடு அறிவிக்கின்றனர்!

★

அகதிகளாக ஓடி வருபவர்கள் யார்?

சிந்தி, பஞ்சாபி, மார்வாரி, குஜராத்தி

ஆகிய வடநாட்டவர்

★

இவர்களது துயர் துடைக்க ஓடோடுகின்றனர் டெல்லிப் பெரியவர்கள்

இதுவரை

ரூ. 250 கோடி செலவிட்டுள்ளனர்

★

ஆனால்......!

இலங்கையிலிருந்து துரத்தப்படும்

தமிழர்களுக்கு

என்ன செய்தார்கள்?

★

'இது சென்னைசர்க்காரே கவனிக்கவேண்டியபிரச்சினை'

என்றார் தேஷ்முக்—டெல்லி நிதி மந்திரியாயிருந்தபோது 1955 ஜூலை 20-ல் சென்னைவந்தபோது

★

இலட்சக்கணக்கான

அகதிகளுக்குக்

கோடிக்கணக்கில்

ரூபாய் செலவிட்ட

டெல்லி

சில ஆயிரம் தமிழருக்கு உதவ மறுத்ததேன்?

★

பரந்த மனம் படைத்த 'அகில இந்தியா'க்கள்

'இதுதான் இந்திய ஒற்றுமை' என்கின்றனர்!

★

வாக்காளர் பெருமக்களே!

★

தமிழரின் நலன்களை

இந்திய ஒற்றுமை என்ற போலி தேசியத்திற்குப் பலி தரும்

'ஏக இந்திய' ஏகாதிபத்திய தாசர்களுக்கா

உங்கள் வாக்கு?

★

தமிழர் உரிமை பெற! வாழ்வு சிறக்கப் பாடுபடும்

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே

வாக்களியுங்கள்

எம்.ஜி.இராமச்சந்திரன்

சுற்றுப்பயண விவரம்

பிப். 25:
காலை 10 மணி: ஸ்ரீவில்லிபுத்தூர் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 4 மணி: திருக்கோட்டியூர் தொகுதி.

பிப். 26:
காலை 10 மணி: கம்பம் (சிறப்புக்கூட்டம்); பகல் 12 மணி: உத்தமபாளையம் தொகுதி; பிற்பகல் 4 மணி: தேனி தொகுதி.

பிப். 27:
இரவு 9 மணி: மதுரை—'சுமைதாங்கி' நாடகம்.

மார்ச் 1:
ஸ்ரீபெரும்புதூர் தொகுதி.

மார்ச் 2:
காலை 8 மணி: லால்பேட்டை; 9-30 மணி: சிதம்பரம் (சிறப்புக் கூட்டம்); 10-30 மணி: திருமுஷ்ணம்; பிற்பகல் 2 மணி: நெல்லிக்குப்பம்; 4 மணி: கடலூர்; 6 மணி: விருத்தாசலம்; 8 மணி: கள்ளக்குறிச்சி; 10 மணி: தர்மபுரி.

மார்ச் 3:
சேலம் தொகுதி.

மார்ச் 4:
காலை 10 மணி: அரூர்; 12 மணி: சிங்காரப்பேட்டை; பிற்பகல் 3 மணி: திருப்பத்தூர் (வ. ஆ.); 5 மணி: கந்திரி; 6-30 மணி: ஜோலார்பேட்டை; 8-30 மணி: வாணியம்பாடி.

மார்ச் 5, 6:
சென்னை நகரத் தொகுதிகள்.

மார்ச் 8:
குளித்தலைத் தொகுதி.

மார்ச் 9:
மதுரை மத்திய தொகுதி.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அறிவிப்பு

சேலம்—1 தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகச் சென்னை சட்டசபைக்குப் போட்டியிடுகின்ற என்னைப் பற்றி, எனக்கு அறிவிக்காமலும் என் அனுமதியின்றியும் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் முதலியவை எவையும் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்

1,020 முறை......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி இந்துமதி அம்மையார் தாம் சேகரித்த புள்ளி விவரங்களைக்கொண்டு தருவதாகவும், இந்த விவரம் தோராயமாகக் கணித்துக் கொள்ளவேண்டியது தானே தவிர, இதுதான் சரியான விவரம் என்று எடுத்துக் கொள்ள முடியாதென்றும், ஏனெனில், பெரும்பாலான துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்த முழு விவரங்களும் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்றும், குறிப்பிட்டிருக்கிறார். (எனவே, இந்த விவரம் குறைந்தபட்ச புள்ளி விவரம் என்பதும், சரியான தகவல்கள் கிடைத்திருக்குமானால் இன்றும் அதிகமான அளவில் எத்தனை பேர் இறந்திருப்பர், காயம் பட்டிருப்பர் என்பதும் கிடைத்திருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்).

இந்திய அகிம்சா மூர்த்திகளின் 10 ஆண்டுக்கால இரத்த வெறியை சுட்டிக் காட்டிய அந்த அம்மையார், 'மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கடந்த 50 வருடங்களில் ஒரு முறை கூடத் துப்பாக்கிப் பிரயோகம் இருந்ததில்லை, என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை 16-வது வட்ட தி. மு. க. தேர்தல் கூட்டத்தில்
அண்ணு
பேசுவார்

23—2—57 சனிக்கிழமை இரவு 7 மணிக்கு, சென்னை யானைகவுனி பொம்மலெய்யர் தெருவில் சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். இராசரத்தினம் தலைமையில் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். அண்ணு அவர்களும் தோழர்கள் என். வி. நடராசன், சி. பஞ்சாட்சரம், வி. ஆர். நாராயணசாமி, என். இ. நாராயணன் ஆகியோரும் பேசுவர்.

இக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் இரவு 9 மணிக்குக் கலந்து கொள்வார்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு
திரைப் படக் காட்சி!

27-2-57 காலை 10 மணிக்கு சென்னை சூளை இலட்சுமி டாக்கிசில், பெரம்பூர் தனித் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் குழுவின் சார்பில் தோழர் க. அன்பழகன் தலைமையில் 'நீதிபதி' திரைப் படக் காட்சி நடைபெறும்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழியர் இராஜசுலோசனு ஆகியோர் மேடை மீது தோன்றுவர்.

எஸ். எஸ். தென்னரசு
சுற்றுப் பயணம்

பிப். 24: தென்மாப்பட்டு; தம்பிபட்டி; 25: திருப்புத்தூர்; 26: எஸ். எஸ். கோட்டை; சூரக்குடி; 27: திருப்புத்தூர்; மார்ச்: 3, 4: திருவாடானை; 5, 6: சிவகெங்கை.

டி. கே. சீனிவாசன் கருத்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எந்தக் கொள்கையையும் விட்டு விட்டதாக நினைத்துக்கொள்ள வேண்டாம்.

"துரதிருஷ்டவசமாக இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் அனைவருமே தேர்தல் வேலைகளில் ஈடுபட்டு அவரவர் தொகுதிகளில் வேலை செய்துகொண்டிருப்பதால் இங்கே 'களம்' கலியாயிருக்கிறது! களம் காலியாக இருக்கின்ற காரணத்தால் எவரெவரோ உள்ளே நுழைந்துவிடுகின்றனர். கழகத் தோழர்களெல்லோரும் களத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் கண்முன் வர முடியாதவர்கள் இப்போது களத்தில் இறங்கியிருக்கிருர்கள். என் அப்படி இப்போது மட்டும் இறங்கிவிட்டார்கள்? அவர்களுக்குத் தெரியும் — 'அண்ணுதுரை காஞ்சிபுரத்திலேயேதான் இருப்பார்; நெடுஞ்செழியன் சேலத்திலேயேதான் இருப்பார்; வெளியே வரமாட்டார்கள்' — என்று! எனவே, ஆள் இல்லாமல் திறந்து கிடந்த வீட்டில் நுழைந்த திருடனைப்போல் களத்தில் இறங்கியிருக்கிருர்கள், நமது மாற்ருர்!

[பேச்சு முடியவில்லை- தொடர்ந்து வெளிவரும்.]

சொல்லில் உறுதி—செயலில் ?

"வெளிநாட்டிலிருந்து பண உதவிக்காகவும், இதர உதவிகளுக்காகவும், இந்தியாவின் சுதந்திரக் கொள்கையை சரணுகதியடையச் செய்துவிட நாம் பிச்சைக்காரர்கள் அல்ல; இப்படிச் செய்வது சுதந்திரத்தின் மதிப்பிற்கும் பெருந்தன்மைக்கும் மாறுபட்டதாகும்; இப்படி ஒருக்காலும் செய்யமாட்டோம்" என்று பண்டித நேரு கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

முக்கிய அறிவிப்பு

தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தின்போது, தினமொன்றுக்கு பத்துக்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டதன் விளைவாக அவரது தொண்டையில் புண் ஏற்பட்டு பேசமுடியாத நிலையில் இருப்பதால் பல நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுவிட்டிருக்கின்றன. அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவையாறு, கந்தர்வக் கோட்டை, லால்குடி தொகுதி, சேலம் மாவட்டம், வேலூர், கொடுமுடி ஆகிய ஊர்கட்குச் செல்ல முடியாதவாறு இருக்கிருர். அவரது உடல் மீண்டும் நலம் பெற்ற பின்னர் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

நடிப்பிசைப்புலவர்
கே. ஆர். இராமசாமி
நிகழ்ச்சிகள்

★

வாணியம்பாடி தொகுதியில்

25—2—57 அன்று, வ. ஆ. மாவட்டம் வாணியம்பாடி தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். டி. வடிவேலு அவர்களை ஆதரித்து, வாணியம்பாடி, ஆலங்காயம், அம்பலூர், மோட்டூர் ஆகிய இடங்களில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கலந்துகொள்வார். இக்கூட்டங்களில் தோழர் இராம. அரங்கண்ணல் அவர்களும் கலந்துகொள்வார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில்

26—2—57 அன்று, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி அபேட்சகர் தோழர் சி. வி. எம். அண்ணுமலை அவர்களை ஆதரித்து, மாலை 4 மணிக்கு ஆவடியிலும், 6-மணிக்கு ஸ்ரீபெரும்புதூரிலும், இரவு 8 மணிக்கு, மதுரமங்கலத்திலும் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கலந்துகொள்வார். இக்கூட்டங்களில் தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் அவர்களும் கலந்துகொள்வார்.

தேர்தல் ஊர்வலங்கள்

சென்னை:

24—2—57 காலை 7 மணிக்கு, தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்து எழும்பூர் ரங்காச்சாரி பூங்காவிலிருந்து 32-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் வி. எஸ். நடராசன் தலைமையில் தேர்தல் ஊர்வலம் நடைபெறும். ஊர்வலத்தில் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஊர்வலத்தில் தோழர் க. அன்பழகன் கலந்துகொள்வார்.

* * *

24—2—57 காலை, தென்சென்னை பாராளுமன்றத் தொகுதி அபேட்சகர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், சென்னை—'ஹாமில்டன்' வாராவதியிலிருந்து புறப்பட்டு, 44, 45, 46, 50-வது வட்டத்தைச் சேர்ந்த முக்கிய வீதிகள் வழியாக தேர்தல் ஊர்வலம் நடைபெறும். மேற்படி வட்டங்களிலுள்ள மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மு. கருணுநிதி
முகவரி:

குளித்தலை தொகுதியில் போட்டியிடும் தோழர் மு. கருணுநிதி அவர்களது முகவரி:—

எண் 17,
கடம்பர்கோவில் கடைவீதி,
குளித்தலை.

இரா. செழியன்
அறிவிப்பு

வருகிற பொதுத் தேர்தலில் கரூர் பார்லிமெண்டரி தொகுதியில், தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிடுகிற என்னைப் பற்றி, என் அனுமதியின்றி பிரசுரிக்கப்படும் அறிக்கைகள், விளம்பரங்கள், துண்டு அறிவிப்புகள் எதுவும் என்னைக் சட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
இரா. செழியன்

மு. கருணுநிதி
அறிவிப்பு

வருகிற பொதுத் தேர்தலில் குளித்தலை சட்டசபைத் தொகுதியில் தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிடுகிற என்னைப் பற்றி என் அனுமதியன்னியில் பிரசுரிக்கப்படுகிற விளம்பரங்கள், துண்டு அறிவிப்புகள், அறிக்கைகள் எதுவும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,
மு. கருணுநிதி

சி. பி. சிற்றரசு
அறிவிப்பு

என்னைக் கேட்காமலேயே என் தொகுதியிலுள்ள பல தோழர்கள் பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து, துண்டு அறிக்கைகள் வெளியிட்டு விளம்பரம் செய்கின்றனர். கூட்டங்களுக்கு வேறு சமயமே வாய்க்காதென்ற காரணத்தாலோ இந்த நேரம் மறுக்க முடியாதென்ற காரணத்தாலோ இப்படி கழகத் தோழர்கள் செய்வது மன வருத்தத்தைத் தருகிறது. ஆகவே, எனக்குத் தெரியாமலே ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள் என்னைக் கட்டுப்படுத்தாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
சி. பி. சிற்றரசு

தேர்தல் கூட்டங்கள்

கொருக்குப்பேட்டை:

24—2—57 மாலை 6 மணிக்கு, காக்காதோப் (லாலாகுண்டா) பில், தோழர் கே. எஸ். அப்துல் ரகீம் தலைமையில் சென்னை 5-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் தேர்தல் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. முனுசாமி எம்.சி., தோழியர் ஜி. பி. அமுதா ஆகியோர் பேசுவர். தோழர்கள் ரகமதுல்லா, முகமது கவுஸ் ஆகியோர் உருது மொழியில் பேசுவர்.

சென்னை — யானைகவுனி:

24—2—57 மாலை 6 மணிக்கு, அண்ணுபிள்ளைத் தெரு, தர்மராசாகோயில் அருகில் பால் வியாபாரிகள்பொட்டு-பிண்ணுக்கு வியாபாரிகள் பொதுநல மன்றச் சார்பில் தோழர் சி. பஞ்சாட்சரம் தலைமையில் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ப. ஆசைமுத்து சி. வி. கே. வேலன் தோழியர் அமுதா ஆகியோர் பேசுவர்.

சென்னை 20-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

24-2-57 காலை 9 மணிக்கு சென்னை 20வது வட்டம் செம்பியம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டமும், தேர்தல் ஆலோசனை, வடக்குழு அமைப்புக் கூட்டமும் எண். 115 கடைத் தெரு, கழக இல்லத்தில் நடைபெறும். கழக உறுப்பினர்கள் சார்பு மன்றங்கள், படிப்பகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் நிதி தாரீர்!

★

	ரூ.	அ.	பை
வரவு 22—2—57 இதழ்ப்படி ...	52,493	12	10
தோழர் ஆர். எஸ். பாண்டியன் மூலம்:			
சென்னை 27-வதுவட்டம் தி. மு. க. அறிவியக்க மன்ற ஆண்டுவிழாவில் (5—1—57) ...	30	10	9
திருவனந்தபுரம் தி. மு. கழகம் ...	153	0	0
எலப்பாக்கம் தி. மு. கழகம் ...	10	0	0
சென்னை மண்ணடி 13-வதுவட்டத் தோழர்கள் தோழர் சி. பீர் மூலம் ...	33	0	0
சென்னை சூளை 8-1-57 தி. மு. க. பொதுக் கூட்டத்தில்—பொதுச்செயலாளர் மூலம்: ...	107	1	6
சேலம்-பாண்டமங்கலம் தி. மு. கழகம் —கே. மனோகரன் மூலம்: ...	41	10	0
சிந்துப்பட்டி சின்னவாகைக்குளம் தி. மு. க. ...	10	0	0
அம்மயநாயக்கனூர் தி. மு. கழகம் ...	29	9	0
பழையவத்தலகுண்டு தி.மு.க., என். பிச்சைமணி	5	0	0
இராமநாதபுரம் கமுகேர்கடை பி. காதர்அலி ...	5	0	0
கலவை தி. மு. கழகம் ...	10	0	0
வெள்ளைவக்கோயில் வி. ஆர். வி. சாமி ...	3	0	0
சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் 10-1-57-ல் நடைபெற்ற பார்க்பேர் பொருட்காட்சி 'சந்திரமோகன்' நாடகத்தில் தோழர் மோகன் அவர்களால் ...	5,000	0	0
மலேயா சிலியோ செண்டாயன் எஸ்டேட் தி. மு. கழக ஆதரவாளர்கள்—தோழர் ஆண்டியப்பன் மூலம் ...	124	8	0
ஐதராபாத் கோல்கொண்டா ஆர். ஜனபாய் இப்ராகிம் ...	14	7	0
மகாபலிபுரம் ராசாமோகன் பி. சண்முக வடிவேலு மூலம்: ...	3	0	0
சேலம் காளிப்பட்டி தி. மு. க. ஆதரவாளர்கள் —எஸ். பி. மாணிக்கம் மூலம் ...	10	0	0
விராலிமலை தி. மு. கழகம் எஸ். எஸ். வீரமணி மூலம்: ...	10	0	0
வென்னவல்குடி கூலயன்காடு வி. சுப்பிரமணியன் ...	20	0	0
கண்டமானடி கே. வி. கே. சாமி மன்றம் ...	6	1	0
நெல்லை பட்டமுடையாபுரம் நா. சு. இளங்கோ ...	22	12	0
பரவை தி. மு. கழகம், தாளமுத்து நினைவுப் படிப்பகம் ...	5	0	0
இராமநாதபுரம் பீமவிலாஸ் எஸ். ஆண்டிச்சாமி ...	16	0	0
நெல்லை-மருதன்வாழ்வு எம். பி. கே. இராமசாமி ...	5	0	0

ஆக மொத்தம் ரூ. **58,168-8-1**

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:—
போதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13.

சென்னை ஓட்டல் தொழிலாளர் சார்பில்:
தி. மு. க. தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

24—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை-பார்க் டவுன் காளப்ப ஆச்சாரி தெருவில், சென்னை ஓட்டல் தொழிலாளர் சார்பில் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், கோகுலகிருஷ்னன், கே. கோவிந்தசாமி, ஜெயராம் ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3 மணிக்கு, பூங்கா நகர் தேவராஜ முதலி தெரு, பூக்கடை சமீபத்திலிருந்து 28-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தேர்தல் ஊர்வலம் புறப்பட்டு, பொதுக்கூட்டத்தில் முடிவுறும்.

சென்னை மகளிர் மன்ற
தேர்தல் பொதுக்கூட்டம்

24-2-57 மாலை, சென்னை சூளை புதுமார்க்கெட் அருகிலுள்ள தர்மராசா கோயில் தெருவில், தோழியர் பேச்சியம்மாள்-பொன்னுசாமி தலைமையில், தோழியர் சத்தியவாணி-முத்து அவர்களை ஆதரித்துத் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழியர்கள் அருண்மொழி-வில்வம், வெற்றிச்செல்வி— அன்பழகன், அமுதா, ஜெகஜோதி-நாகராசன்; சற்குணம், சி. பி. சி. சாந்தா ஆகியோர் பேசுவர்.

வ. ஆ. மாவட்டத்தில் தேர்தல் பணி

சென்னை சட்டசபை வேலூர் தொகுதியில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர் தோழர் எம். பி. சாரதி, ஆம்பூர் சட்டசபை பொதுத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகர் தோழர் சம்பங்கி ஆகியோருக்கு ஆதரவு தருவதென வ. ஆ. மாவட்டம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும், வேலூர் பாராளுமன்றத் தனித் தொகுதியில் சம்மேளனச் சார்பில் போட்டியிடும் தோழர் எம். கிருஷ்ணசாமியையும் பாராளுமன்றப் பொதுத் தொகுதி சுயேச்சை அபேட்சகர் என். சம்பந்தம் அவர்களையும் சட்டசபை ஆம்பூர் தனித் தொகுதி சம்மேளன அபேட்சகர் எஸ். ஆர். முனுசாமியையும் ஆதரிப்பதென வ. ஆ. மாவட்ட தி. மு. கழகமும் கலந்துபேசி தலைமைக் கழகத்திற்கு வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் முல்லை-சத்தி அவர்களும் வ. ஆ. மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் செயலாளர் ஏ. மகாதேவன் அவர்களும் இச்செய்தியை அனுப்பியுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.